# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

| தரம் :06 | புவியியல் | நேரம் : |
|---|---|---|
| | சுட்டெண் .................................................................. | 2.00 மணி |

### பகுதி I

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) உமது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
   1) வடமாகாணம் 2) மத்திய மாகாணம்
   3) கிழக்கு மாகாணம் 4) மேல் மாகாணம்

2) குறிப்பிட்டதோர் பிரதேசத்தில் குறுகிய காலத்தில் நிலவும் வளிமண்டல நிலைமைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) காலநிலை 2) வானிலை
   3) வெப்பநிலை 4) வானிலை மூலகங்கள்

3) நெல் வயல்களை நாசம் செய்யும் பூச்சியினங்களை அழிக்கும் விலங்கினம் எது?
   1) காகம் 2) மண்புழு 3) வௌவால் 4) தும்பி

4) மலைப்பாங்கான பிரதேசங்களில் பெருமளவில் மேற்கொள்ளப்படும் பயிரினங்களில் ஒன்று,
   1) தெங்கு 2) நெல் 3) தேயிலை 4) கறுவா

5) பின்வருவனவற்றில் இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?
   1) இந்து சமுத்திரம் 2) பசுபிக் சமுத்திரம் 3) ஆசியா 4) அத்திலாந்திக்

**மிகப்பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.**

6) திட்டப்படம் ஒன்றினை வரையும்போது ...................................... குறிப்பிடப்பட வேண்டும்.

7) வானிலை மூலகங்களில் பிரதானமானது ...................................... ஆகும்.

8) பிரம்பு உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடமாக ................................ உள்ளது.

9) வளி மாசடைவதனால் ...................................... ஏற்படுகின்றது.

10) இலங்கையில் ................................ பிரதான நிர்வாக நகரமாகக் காணப்படுகிறது.

(ரதாவடுன்ன, திசை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, வெப்பநிலை, அமில மழை, மழைவீழ்ச்சி)

**பொருத்தமானவற்றை இணைக்குக.**

| | |
|---|---|
| 11) சக்தி சிக்கனம் | காவியுடைக்கள்ளி |
| 12) வானிலை மூலகம் | திருகோணமலை |
| 13) கரையோர நிலத்தோற்றம் | மண்ணரிப்பு |
| 14) இடம்பெயர் பறவை | புளொ ஒளிர்வு விளக்கு |
| 15) முறையற்ற நிலப்பயன்பாடு | காற்று |



kalvi.lk

**சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

16. காற்றின் வேகம் காற்றுத் திசைகாட்டி மூலம் கணிக்கப்படும். ( )

17. எமது நாட்டில் நிர்வாகப் மிகப்பெரிய பிரிவு மாகாணம் ஆகும். ( )

18. செண்பகம் பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கிறது. ( )

19. ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் தெங்குச் செய்கை அதிகமாக இடம் பெறுகிறது. ( )

20. அனுராதபுரம் புராதன நீர்வள நாகரிகத்தின் மத்திய நிலையமாகும். ( )

(20x2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) பின்வரும் இடங்களை இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

I) கிளிநொச்சி
ii) கொழும்பு
iii) திருகோணமலை
iv) தென் மாகாணம்
v) யாழ்ப்பாணம்
vi) மன்னார்

(6x2 = 12 புள்ளிகள்)

02) 1. உமது பாடசாலை பற்றிய பின்வரும் விடயங்களை குறிப்பிடுக.
 i) கிராம உத்தியோகத்தர் பிரிவு -
 ii) பிரதேச செயலாளர் பிரிவு -
 iii) மாவட்டம் -

2. “இன்று மு.ப 7.00 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 220 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி கொழும்பிலும், $30^{o}c$ உயர் வெப்பநிலை திருகோணமலையிலும் பதிவாகியது. தென்மேற்கு திசையிலிருந்து காற்று பலமாக வீசுவதனால் மத்திய மலைநாட்டின் மேற்குப் பகுதியில் கடுமையான மழைவீழ்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது”
இந்த வானிலை அறிக்கையில் கூறப்பட்ட வானிலை மூலகங்கள் இரண்டைக் குறிப்பிட்டு, அதனை அளவிட பயன்படும் கருவிகளையும் பெயரிடுக.

3. பாடசாலை அயற்சூழலில் அவதானிக்கக்கூடிய புவியியல் அம்சங்கள் 5 ஐ குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

03) 1. சூழலில் நன்மைகளை ஏற்படுத்தும் விலங்கினங்கள் 3 ஐ தருக.
2. தாவரங்களின் பயன்கள் 4 ஐ குறிப்பிடுக?
3. சூழலில் நீர் வளத்தை பாதுகாக்கக்கூடிய வழிகள் 5 ஐ கூறுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

04) 1. நிலத்தைப் பயன்படுத்தும் முறைகள் 3 ஐ எழுதுக.
2. நிலத்தை முறையாகப் பயன்படுத்த செய்ய வேண்டியவை 2 ஐ தருக.
3. முறையற்ற நிலப் பயன்பாட்டினால் ஏற்படும் பாதிப்புக்கள் 5 ஐக் குறிப்பிடுக.

(3+4+5= 12 புள்ளிகள்)



kalvi.lk

05) 1. கழிவுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
2. கழிவுகளை மீள் சுழற்சி செய்தல் என்றால் என்ன?
3. கழிவுப் பொருட்களை பயன்படுத்தி செய்யக்கூடிய ஆக்கங்கள் 5 தருக?

(3+4+5 = 12 புள்ளிகள்)

06) 1. இலங்கைத் தீவு அமைந்துள்ள கண்டம், சமுத்திரம் என்பவற்றைக் குறிப்பிடுக.
2. உலகிலுள்ள தீவுகள் 4 ஐ பெயரிடுக.
3. இலங்கையின் அமைவிடத்தினால் கிடைக்கும் நன்மைகள் 2 ஐ குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

07) 1. உமது பாடசாலை அயற் சூழலில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள் 3 ஐ தருக?
2. உமது பிரதேசத்தில் கிடைக்கும் சேவைகள் 4 ஐ எழுதுக?
3. பின்வரும் கைத்தொழில்களுக்கு பிரசித்தி பெற்ற இடங்களை குறிப்பிடுக.

i) மரத்தளபாடம்

ii) முகமூடிகள்

(3+4+5 = 12 புள்ளிகள்))

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk



Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**